அனுப்புநர்,

திருமதி. இரா. ஸ்டெல்லாமேரி மல்லிகா,

முதல்வர்,

மாவட்ட ஆசிரியர் கல்வி

மற்றும் பயிற்சி நிறுவனம்,

ஜி.அரியூர், விழுப்புரம் மாவட்டம்.

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மை

கல்வி அலுவலர்கள்.

ந.க.எண். 145/அ1/2021 நாள். 24/08/2021

ஐயா/அம்மையீர்,

பொருள் : ஆசிரியர் கல்வி - விழுப்புரம் மாவட்டம், ஜி.அரியூர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் - 12ஆம் வகுப்பு தாவரவியல் மற்றும் உயிரி-தாவரவியல் பாடத்திற்க்கான பலஉள் தெரிவு வினாக்கள் (Multiple choice questions) தயாரிக்கும் பணிக்கு ஆசிரியர்களை பணிவிடுப்பு செய்ய கோருதல் - சார்பு.

பார்வை :

1. சென்னை-06, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.4244/ஈ1/2021 நாள்.08.2021,
2. சென்னை-06, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இணை இயக்குநரின் இணையவழிக் கூட்ட அறிவுரைகள் நாள். 22.07.2021.

-------------

மேற்காணும் பொருள் சார்ந்து பார்வையில் காணும் சென்னை-06, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களின் அறிவுரைகளுக்கிணங்க 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு தாவரவியல் மற்றும் உயிரி-தாவரவியல் பாடங்களுக்கு பாட வாரியாகவும் அலகு (chapter) வாரியாகவும் பலவுள் தெரிவு வினாக்கள் (Multiple choice questions) தமிழ் மற்றும் ஆங்கில வழியில் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட முதுகலை தாவரவியல் ஆசிரியர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாட அலகிற்கு (200 பலவுள் தெரிவு வினாக்களுக்கு குறையாமல்) கொடுக்கப்பட்டுள்ள EXCEL அட்டவணையின் படி தமிழ் & ஆங்கில வழியில் Arial Unicode Font மற்றும் Font Size-12 என்றவாறு பிழையில்லாமல் தட்டச்சு மற்றும் மீளாய்வு செய்து vpmdiet2012@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 04.09.2021 பிற்பகலுக்குள் அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இந்த பணியினை மேற்கொள்ள 24.08.2021 பிற்பகல் முதல் 04.09.2021 பிற்பகல் வரை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள தங்கள் மாவட்டத்தில் பணிபுரியும் முதுகலை தாவரவியல் ஆசிரியர்களை வீட்டிலிருந்து Online-இல் பணிபுரிய ஏதுவாக பணிவிடுவிப்பு செய்யுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு:

1. முதுகலை ஆசிரியர்கள் பெயர்பட்டியல்.

2.Model Format

நகல்:

1. பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-06 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

2.இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

மா ஜெயமாலை

முதல்வர்க்காக 24/8/2021

மாவட்ட ஆசிரியர் கல்வி

மற்றும் பயிற்சி நிறுவனம்,

ஜி.அரியூர், விழுப்புரம் மாவட்டம்.

24/8/21